தன் தோல்வி பற்றி குமாரசாமி ராஜா:

உதவி கிடைக்குமா என எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. இதைத் தவிர சம்பந்தப்பட்ட வரை தென்னாற்காடு, வட ஆற்காடு ஜில்லாக்கள் நீங்கலாக வேறு இடங்களில் மந்திரிசபைக்கு அவ்வளவு பலத்த எதிர்ப்பு கிடையாது. பார்லி கடு இடங்களிலும் சில சிறிய எதிர்ப்பு வாதக் கட்சிகள் தான் வெற்றி பெற்றிருக்கின்றன. ஆந்திராவிலும் கேரளத்திலும் நிலைமை வேறு. அங்கு பாஷாவாரி க்கோரிக்கை, கம்யூனிஸ்ட்கள் மனதும் பலத்த [illegible] தோன்றுகிறது. தனி வகும் [illegible] பாருக்க [illegible] ப்பம் என்று சொல்லமுடியாதென்றாலும் [illegible] அறிவிக்கப்படும் [illegible] காங்கிரஸ் அபேட்சகர்களும், மந்திரிகளும் தோற்றுக்கின்றனர் என்றார்.

ராஜீனாமா பற்றி சொன்னதாவது: தாம் அரசியல் சட்ட நிபுணர் அல்லவென்றும் தாம் இப்பொழுது ராஜீனாமா செய்தால் நிலைமை என்ன வரும் என்பதை பற்றி சட்ட நிபுணர்களை கலந்தாலோசிக்க விரும்புவதாக கூறினார். நாமும் மந்திரி சபையும் ராஜீனாமா செய்வதானாலும் கவர்னர் வேண்டுமென்றால் புதிய மந்திரி சபை ஏற்படும் வரைத் தம்மையே பதவியில் இருக்குமாறு கேட்பதுதான் என்றார். மேலும் சம்பந்தமாக எனக்கு கையால் இப்போது நான் தோற்றுவிட்டேன். ஆனால் காங்கிரஸ் மெஜாரிட்டி கட்சியாக வந்து நான் காங்கிரஸ் கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டால் அப்பொழுது என்ன செய்வது? குறைந்தது மூன்று மாதமாவது நான் முதன் மந்திரி பதவியில் நீடித்து இருந்து வரலாம். எனக்குத் தெரிந்தவரை அரசியல் சட்ட சம்பந்தமான நிலை இதுதான். இதெல்லாம் நடக்கப் போகிறதென்று நான் சொல்லவில்லை. ஆனால் இதுதான் உண்மையான நிலை. அப்படியானாலும் மார்ச் மாதம் வரை நான் முதன் மந்திரியாக நீடித்து பதவியில் இருந்து வருவதில் சட்ட சம்பந்தமான சிக்கல் எதுவும் கிடையாது. தற்பொழுது அசெம்பிளியால் எனது கட்சி (லீடர்) இன்னும் பதவியில் இருந்து வருகிறது. நான் இக்கட்சியாலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவனாக இருந்து வருகிறேன். எனது சொந்த தொகுதியில் நான் முதன் மந்திரியாக இருக்கவில்லை. பதவியிலுள்ள காங்கிரஸ் கட்சியால் பார்த்து என்று தொகுதியில் தான் நான் முதன் மந்திரியாக இருந்து வருகிறேன். ஒரு தொகுதியில் நான் தோற்றுவிட்டாலும் இன்னொரு தொகுதியிலிருந்து மறு தேர்ந்தெடுக்க நான் நிற்பதற்கு எவ்வித தடையும் இல்லை. நான் தேர்தலுக்கு மீண்டும் நிற்க போகிறேன் என்று சொல்லவில்லை; இது சாத்தியமே. எனவே மார்ச் மாதம் வரை நான் முதன் மந்திரியாக நீடித்திருப்பது அரசியல் சட்ட ரீதியில் உகந்ததுதானதே.

நானும் இன்னும் சில மந்திரிகளும் தோற்றுப்போனதை எதிர்க்கட்சிகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு வேகமாக பிரசாரம் செய்து வருகின்றனர், ஆனால் இதற்காக நாங்கள் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்ள முடியாதென்றும் கூறினார். இவ்விஷயத்தில் நாம் மன்னிப்பு கோருவது இதற்கு இன்னும் கிடைக்கவில்லையோ அல்லது வேறு எந்த நாட்டிலோ எந்த விதமான உதாரணமும் கிடையாதென்றும். ஒருசமயம் முதன் மந்திரி என்ற நாட்டிலும் தோற்ற போதிலும் கூட மாட்டார் என்றும் எதுவானாலும் நிலைமையை தெளிவாக உணர்ந்து அதற்கேற்ப செயல்பட வேண்டுமென்றும் தன் கருத்துக்களை தான் தெளிவுபடுத்தக் கூறினார். இவ்விஷயம் குறித்து கவர்னரோடு பேசினீர்களா என்று கேட்டதற்கு பூரணமாக நான் கலந்தாலோசிக்க வேண்டும் என்றார்.